முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை கிண்டி, சென்னை – 25
அவர்களின் செயல் முறை ஆணை
பிறப்பிப்பவர் – திரு.பி.ஆர்.குமார், எம்.இ.,

198/2023

0 6 FEB 2023

செயல் முறை ஆணை எண்.55133 / நிர்.7 / 2002 நாள். 11.01.2023

| | |
|---|---|
| கோ.பொ. | |
| கோ.க. | |
| உ.பொ. | |
| வ.தொ.அ | |
| க.கா | |

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – திரு.ரா.பசுபதி, த/பெ.(லேட்) திரு.எஸ்.ராஜு, சாலை ஆய்வாளர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல்.

பார்வை :
1) முதன்மை இயக்குநர் (நெ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். நிர்3(2) / 18230 / 2018, நாள்.28.11.2019.
2) முதன்மை இயக்குநர் (நெ), சென்னை அவர்களின் குறிப்பாணை எண்.55133 /நிர்.1(2) / 2002, நாள்.05.12.2020, 06.07.2021, 13.08.2021. 18.04.2022 (ம) 12.10.2022.
3) அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை; நாள் : 26.02.2021.
4) கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப செய்யாறு, அவர்களின் கடித எண். 534 / 2020 / ஆ1, நாள்.16.07.2021.
5) கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) சென்னை அவர்களின் க.எண்.90 / அ3 / 2022 / தேநே, நாள்.15.11.2022.

----

ஆணை–

நெடுஞ்சாலைத்துறையில் வேலூர் (தே.நெ) உட்கோட்டத்தில் சாலைப் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.எஸ்.ராஜு அவர்கள் பணியிடையே 13.05.1999 அன்று இயற்கை எய்தினார். அதனையடுத்து மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.ரா.பசுபதி அவர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக்கோரி 21.11.2001 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார். அவ்விண்ணப்பம் உரிய வழிமுறையில் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. அதன்பேரில் தனியரின் வயது, கல்வித் தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றுகளும் சரிபார்க்கப்பட்டு அவருக்கு பார்வை 1–இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 12.12.2019 மு.ப. அன்று பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.12.2019 மு.ப. முதல் பணிவரன் முறை செய்திட கோரி பார்வை 4 (ம) 5–இல் காணும் கடிதங்களின் மூலம் கருத்துரு பெறப்பட்டுள்ளது.

2. தனியரின் தந்தையும் மறைந்த அரசு ஊழியருமான திரு.எஸ்.ராஜு அவர்கள் சாலை ஆய்வாளராக பணிபுரிந்த போது இயற்கை எய்தினார். மறைந்த அரசு ஊழியர் இயற்கை எய்திய நாளான 13.05.1999 அன்று திரு.ரா.பசுபதி (பிறந்த தேதி : 15.06.1979) அவர்களின் வயது 19 வருடம் 11 மாதம் ஆகும். கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வயதான 40–ஐ தனியர் அரசு ஊழியர் இயற்கை எய்திய நாள் அன்று கடந்திருக்கவில்லை.

3. பார்வை 3–இல் காணும் அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்து வருபவர்களின் பணியை வரன்முறை செய்ய எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து நேர்வுகளிலும் தனியர்களது பணியினை நியமன அலுவலர் அளவிலேயே பணிவரன்முறை செய்து உத்தரவிட உரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் சம்பந்தப்பட்ட தனியருக்கு எந்தவித விதித்தளர்வும் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கும் பெறவேண்டிய நிலை எழவில்லை.

4. எனவே மேற்கண்ட விவரங்கள் அடிப்படையிலும் பார்வை 3ல் காணும் அரசாணையின்படி திரு.ரா.பசுபதி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.12.2019 மு.ப. முதல் பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

5. தனியருக்கு பணிவரன்முறை, செய்யப்பட்ட நாள் முதல் தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டு தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிகாலத்தில் இரண்டாண்டுகளை தகுதிகாண் பருவ காலமாக வைக்கவும் ஆணையிடப்படுகிறது. மேலும் தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பி.ஆர்.குமார்
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலை

பெறுநர்
திரு.ரா.பசுபதி, இளநிலை உதவியாளர்,
த/பெ. (லேட்) திரு.எஸ்.ராஜூ,
கோட்டப் பொறியாளர் (தே.நெ), வேலூர் மூலமாக

நகல்
1. தலைமைப் பொறியாளர் (தே.நெ), சென்னை.
2. கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) சென்னை.
3. கோட்டப் பொறியாளர் (தே.நெ), வேலூர்.
4. நிர்வாகம் 3 பிரிவு, முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகம், கிண்டி, சென்னை.

உண்மை நகல் / உத்தரவுப்படி / அனுப்பப்படுகிறது

11/01/2023

கண்காணிப்பாளர்

11/1/23 o/o கோட்டப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலை,
வேலூர்.

மே.மு.எண்: 198/ஆ1/2023/நாள்: 08/02/2023
"அனுப்பப்படுகிறது"

பெறுநர்
திரு.ரா. பசுபதி இளநிலை உதவியாளர்
கோட்டம் (தே.நெ) கோட்டம்

கோட்டப் பொறியாளர், தே.நெ
தேசிய நெடுஞ்சாலை,
வேலூர்.

8/2/2023

08.02.2023